# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Tuesday, the 25th February 1969.**

The House met in the Council Chamber Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Stamps brought out to commemorate the World Tamil Conference*

* 37 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the reason for the stoppage of sale of stamps brought out to commemorate the World Tamil Conference;

(*b*) the details of the model stamp sent by this Government to the Central Government;

(*c*) the changes found in the stamp brought out by Central Government; and

(*d*) whether a paper will be placed on the Table of the House?

**உலகத் தமிழ் மாநாடு நினைவு அஞ்சல் தலை விற்பனை விழா**

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உலகத் தமிழ் மாநாடு நினைவு அஞ்சல் தலை விற்பனை நிறுத்தப்படக் காரணம் என்ன?

(இ) தமிழக அரசு, மத்திய அரசுக்கு அனுப்பிய மாதிரி அஞ்சல் வில்லையின் விவரங்கள் யாவை?

(உ) மத்திய அரசு வெளியிட்ட அஞ்சல் வில்லையில் என்னென்ன மாறுதல்கள் இருந்தன?

(எ) இது பற்றிய விவர அறிக்கை சபையின் முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த அஞ்சல் தலைகளில் இந்திச் சொற்கள் சிறப்புறப் பொறிக்கப்பட்டிருந்ததுபோல் தமிழ்ச் சொற்கள் எவையும் அப்பாங்குடன் பொறிக்கப்படாத காரணத்தாலும், இயல்பாகவே உணர்ச்சி கிளர்ந்தெழுந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் வேளையில் இத்தகைய அஞ்சல் தலை வெளியீட்டு விழாவை நடத்துவது மிகமிகப் பொருத்தமற்றதாகுமென்று முதலமைச்சர் உணர்ந்ததாலும்

[25th February 1969

இவ்விழா நடைபெறவேண்டியதில்லை என அவர் கருதினார். இந்த முடிவிற்கு வருமுன்னர் மாணவர் சமுதாயத்தின் அடர்ந்த உணர்ச்சி வேகமும் கருத்தில் கொள்ளப்பட்டது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, இங்கிருந்து அனுப்பியபடியே டில்லியில் அச்சடித்து அனுப்பினார்களா, அல்லது இங்கிருந்து அனுப்பியதற்கு மாறாக அச்சடித்து அனுப்பினார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போது அன்றைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இருதரப்பிலும் உள்ள இலாகாக்களில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று அப்போதே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எம். எத்திராஜுலு :** இந்தத் தவறு நேர்ந்ததற்கு இந்த அரசில் இருக்கும் ஒரு உத்தியோகஸ்தர்தான் காரணம் என்றும் அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். அப்படியானால் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? மற்றொன்று, அது சம்பந்தப்பட்ட பைல்கள் காணப்படவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னது அதையெல்லாம் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். பெரிய காரியம் நடந்துவிட்டது என்று கிளரிக்கொண்டிருக்கவேண்டாம். அது பெரிய காரியமல்ல. தவறு நேர்ந்தது தெரிந்து நிறுத்தப்பட்டது. அதற்காக விளக்கம் அளிக்கப்பட்டது என்று அன்றைய தினம் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

### *Printing of Electoral Rolls*

* 38 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the electoral rolls are printed even in private presses besides the State Government Press; and

(*b*) if the rolls are printed in private presses, the method adopted for selecting such presses?

### வாக்காளர் பட்டியலை அச்சிடல்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாக்காளர்கள் பட்டியல் தமிழக அரசு அச்சுக்கூடந் தவிர தனியார் அச்சகங்களிலும் அச்சிடப்படுகிறதா ?

(இ) தனியார் அச்சகங்களில் அச்சிடப்பட்டால் எம்முறையில் அச்சகங்கள் அச்சிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?